6. அரசினர் தீர்மானம்.

அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"சட்டமன்ற விதி 21(3)-ன் கீழ் "அரசினர் சட்ட முன்வடிவுகள்" என்ற தலைப்பில் 4-வது இனம் தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1972) 1-வது இனத்துக்குப் பின்னர் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டமன்ற விதி 21(3)-ன் கீழ் "அரசினர் சட்ட முன்வடிவுகள்" என்ற தலைப்பில் 4-வது இனம் தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1972) 1-வது இனத்துக்குப் பின்னர் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(2) தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1972).

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு, தொழிலாளர் நல நிதி சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தொழிலாளர் தம் நலனையும் அவர்களைச் சார்ந்துள்ளோர் நலனை யும் ஊக்கி வளர்ப்பதற்காகத் தொழிலாளர் நல நிதி ஒன்றினை நிறுவுவதன் அவசியம் பலகாலும் உணரப்பட்டு வந்தது. இந்திய

@ 112–132 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1972 ஆகஸ்ட் 23] [திரு. என். வி. நடராசன்]

அரசு நிறுவிய தொழிலாளர் நலக்குழு எல்லா மாநிலங்களிலும் தொழிலாளர் நல நிதியினை ஏற்படுத்த வேண்டுமெனப் பரிவுரை செய்தது. தொழிலாளர் நல நிதி ஒன்றைச் சட்ட வகையில் அமைத்திட வேண்டுமென்று தொழிலாளர் துறை ஆலோசித்துப் பார்த்து இம்மாநிலத்திற்கெனத் தொழிலாளர் நல நிதி ஒன்றை ஏற்படுத்துவதென முடிவு செய்தது. அதற்கிணங்க சட்ட மன்றத்தின் கடந்த கூட்டத் தொடரில் தமிழ் நாடு தொழிலாளர் நல நிதிச் சட்ட வரைவு (சட்டப் பேரவை சட்ட வரைவு எண் 23/1972) கொண்டு வரப்பட்டது. சட்ட மன்றப் பேரவையின் 14 உறுப் பினர்கள் சட்ட மன்ற மேலவையின் 7 உறுப்பினர்கள் கொண்ட இணை ஆய்வுக் குழுவின் ஆய்வுக்காக இச்சட்ட வரைவு அனுப்பி வைக்கப்பட்டது.

தொழிலாளர் பிரதிநிதிகள், தொழிலதிபர் பிரதிநிதிகள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தனிப்பட்ட நபர்கள் நிறுவனங்கள் ஆகியவர் களைக் குறிப்புரைகள் அனுப்புமாறு இந்த இணை ஆய்வுக்குழு கேட்டுக் கொண்டது. பற்றுள்ளவர்கள் அளித்த வாய்மொழி சாட்சியத்தை யும் இக்குழு பதிந்து கொண்டது. பற்றுள்ளவர்கள் பணிந்தனுப்பிய குறிப்புரைகளிலும் குழு முன் அளிக்கப்பட்ட சாட்சியத்திலும் உள்ள பல்வேறு கருத்துரைகளை இக் குழு பரிசீலனை செய்தது. இந்த ஆய்வுக் குழு ஏழு முறை கூடி சட்ட வரைவின் ஒவ்வொரு பிரிவையும் ஆராய்ந்து சட்ட வரைவில் சில மாறுதல்களை செய்தது. இந்த ஆய்வுக் குழுவின் அறிக்கையும் திருத்தியமைக்கப்பட்டுள்ள சட்ட வரைவும் உறுப்பினர்களுக்கு முன்னரே அனுப்பப்பட்டுள்ளன. சட்ட வரைவில் குழு சேர்த்துள்ள முக்கியமான சில மாறுதல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) இரண்டாவது பகுதியின் கீழ் "தொழிலாளர்" என்னும் சொல்லின் பொருள் விளக்கம் திருத்தப்பட்டுள்ளது. பெரிதும் நிர்வாக பொறுப்புள்ளவர்களாய் அல்லது மேற்பார்வைப் பொறுப் புள்ளவர்களாய் ரூ. 750-க்கு மேல் ஊதியம் வாங்குபவர்கள் நீங்கலாக 12 திங்கள் கால அளவில் முப்பது நாட்களுக்கு ஒரு நிறுவனத்தில் பணி புரியும் அனைவரையும் உட்படுத்தும் வகையில் இப்பொருள் விளக்கம் திருத்தப்பட்டுள்ளது.

(2) "நிறுவனம்" என்னும் சொல்லின் பொருள் விளக்கம் உணவகங்களும் (ஓட்டல்கள்) அடங்கும் வகையில் விரிவு படுத்தப் பட்டுள்ளது.

(3) மாதிரி நிலை ஆணைகளில் 20-வது ஆணையின் கீழும் 1936-ம் ஆண்டு ஊதியம் வழங்கும் சட்டத்தின் 9(2) பிரிவில் கண்ட விலக்கு நிபந்தனையின் கீழும் பிடித்துக் கொள்ளப்படும். தொகைகளைத் தொழிலாளர் நல நிதிக் கணக்கில் சேர்ப்பதற்காக 3-வது பகுதியின் கீழ் விதித்துறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர் சட்டங்களை மீறியதற்காகத் தொழில் அதிபர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிற அபராதத் தொகைகளை இந்த நிதியில் சேர்ப்பதற்கும் இப்பகுதியின் கீழ் தக்க மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(4) தொகை கொடுக்கப்படாமல் சேர்ந்து வந்திருக்கும் விவரத்தை செய்தித் தாள்களில் வெளியிட வேண்டும் என்ற கட்டாயமும் 13-வது பிரிவின்கீழ் நீக்கப்பட்டுள்ளது.

(5) 17-வது பிரிவின்கீழ் வாரியம் மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் கீழ்க்கண்ட இடங்கள் சேரும் வகையில் மாற்றியமைக்கப் பட்டுள்ளன.

(க) சமுதாய சமூகக் கல்வி நிலையங்கள்

(ங) வாழ்க்கைத் தொழிற் பயிற்சி

(ச) சமுதாயத் தேவைகள்

(ஞ) பொழுது போக்கும் ஏனைய மனமகிழ் நடவடிக்கைகள்

(ட) காச நோயாளி நலம் பேண் மனைகள்

(ண) நல்வாழ்வு விழைவிடங்களில் விடுமுறை இல்லங்கள்

(ந) தொழிலாளரின் வீட்டு பெண்டிருக்குப் பகுதி நேர வேலை

(ப) சிறுவர்களுக்கு ஊட்டச் சத்துணவு

(ம) ஏழ்மையுற்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புகள்

(ய) இச்சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட பணியாளர்களின் ஊதியம்—படிகள் உட்பட இச்சட்ட நிர்வாகச் செலவு

(ர) தொழிலாளரின் வாழ்க்கைத் தரத்தை வசதிப்படுத்தவும் தொழிலாளரின் சமூக நிலையை மேம்படுத்தவும் உகந்தவையென வாரியம் கருதும் பிற நோக்கங்கள்.

1972 ஆகஸ்ட் 23] [திரு. என். வி. நடராசன்]

(6) வாரியத்தின் தணிக்கையிடப்பட்ட கணக்கு விவரத்தை சட்ட மன்றத்தின் இரண்டு அவைகளிலும் வைப்பதற்கு வகை செய்யும் முறையில் 19-வது பகுதி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

(7) பல்வேறு நிறுவனங்கள் செய்யும் தொழிலாளர் நலச் சார்பு செலவுகளை மேற்பார்வையிட்டுக் கட்டுப்படுத்த 33-வது புதிய பகுதி வாரியத்துக்கு அதிகாரம் அளிக்கிறது. தொழிலாளரின் நலனை ஊக்கி வளர்ப்பதெற்கேற்ற வகையில் நிதியைப் பயன்படுத்துவதில் நிறுவன அதிபர்களைக் கட்டளையிடுவதற்கும் வாரியத்துக்கும் இது அதிகாரம் அளிக்கிறது.

(8) 33-வது புதிய பகுதியின்கீழ் வாரியம் பிறப்பிக்கும் கட்டளைகளை நிறைவேற்ற தவறுவதற்கு 34-வது பிரிவின் புதிய பகுதி தண்டனைகளை விதிக்கிறது.

(9) வாரியத்தின் ஆண்டு நிர்வாக அறிக்கை சட்ட மன்றத்தின் இரு அவைகளிலும் வைக்கப்பட வேண்டும் என 35-வது புதிய பகுதி விதிக்கிறது.

(10) வாரியத்தைக் கலைத்து நிர்வாகத்தை அரசு மேற்கொள்ளும் கால அளவு முதற்கண் ஆறு திங்கள் எனவும் அவ்வாறு கலைத்திருப்பதை நீட்டிப்பது மேலும் ஆறு திங்களுக்கு மேற்படலாகாது எனவும் விதிக்கும் வகையில் 33-வது பழைய பகுதி அதாவது 36-வது புதிய பகுதி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு செய்துள்ள மாறுதல்கள் இச்சட்ட வரைவுகளின் நோக்கங்களையும் பரப்பெல்லைகளையும் விரிவுப் படுத்தியுள்ளன என்பதை ஈண்டுக் குறிப்பிட விழைகிறேன். சட்டமன்றப் பேரவை நிறைவேற்றியுள்ளபடி இச்சட்ட வரைவினை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு இந்த அவையினரை கேட்டுக்கொள்கிறேன். பொறுக்குக் குழுவில் எல்லா உறுப்பினர்களும் கட்சிக் கண்ணோட்டத்தை விடுத்து, பொது நோக்குடன் இந்தச் சட்டத்தை நல்ல முறையில் திருத்தி அமைப்பதற்கு ஒத்துழைத்தார்கள், அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : முன் மொழியப்பட்ட திர்மானம் :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, இந்த மசோதாவை எந்தவிதக் கட்சி பேதமும் இல்லாமல், நல்லெண்ணத்தில் எல்லோரும் பரிசீலனை செய்தோம். கடைசியில் எல்லோருடைய அபிப்பிராயத்தையும் ஏற்றுக்கொண்டு இப்போது இதை மீண்டும் கொண்டு வந்திருப்பதால், இதில் பேசுவதற்கு எதுவுமில்லை. தொழிலாளருக்கான நன்மையைச் செய்வதற்கு எல்லோரும் நல்லபடி ஆராய்ந்து, இந்த மசோதாவைக் கொண்டுவரும்போது, இதை அனைவரும் ஆதரிக்கும்படியாக நானும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1972) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

திர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 43 வரை மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1972) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1972-ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1972) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(3) தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு கடன் நிவாரண சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1972)

THE HON. THIRU O. P. RAMAN : Mr. Chairman, Sir, I beg to move—

That the Tamil Nadu Debt Relief Bill, 1972@ (L.A. Bill No. 21 of 1972), as passed by the Assembly, be taken into consideration.

As the House knows, this Bill has been brought forward to ameliorate the sufferings of the non-agriculturist low-income classes, owing to their heavy indebtedness mounting day-by-day because of the usurious rates of interest charged by the creditors.

The Joint Select Committee has considered, in detail, the provisions of the Bill and made some changes. I may mention the following which are among the important changes made :—

(i) Having regard to the prevailing rates of interest in the Co-operative and banking sectors, the rate of interest has been fixed at 9 per cent, instead of 6¼ per cent per annum.

(ii) Sub-clause (3) of clause 2 sought to make income-tax assessees' ineligible for the benefit of the Act if the assessee's annual income tax was more than Rs. 7,200 and other persons so ineligigle, if the person was assessed to Agricultural income-tax on an annual agricultural income of more than Rs. 7,200.

@ 132–149 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.